கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்.
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com

ஞானம் 6 - ஒலி 03 | 15-01-2023



# தெய்வமே
# தெய்வப் புதல்வர்களே
# நன்றியோ நன்றி





**தலையங்கம்**

அருட்பணி. சைமன் பீட்டர்

# தாயுள்ளம் வாழ்க வாழ்கவே...

கிறிஸ்துவுக்குள் பிரியமான எனதருமை தமிழ்ச் சொந்தங்களே உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கங்கள்.

வருகின்ற சனவரி 15, 16, 17 நாட்களில் பொங்கல் பெருவிழாவைக் கொண்டாடப் போகின்றோம்.

உங்கள் அனைவருக்கும், இனிய பொங்கல் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதல் நாளன்று தைப் பொங்கலையும், இரண்டாம் நாளன்று மாட்டுப் பொங்கலையும், மூன்றாம் நாளன்று உழவர் திருநாளையும் கொண்டாடுகின்றோம்.

இந்த மூன்று திருநாட்களுமே நன்றியை மையப்படுத்திய விழாக்கள். முதல் நாளன்று நமக்குக் கடந்த வருடம் முழுவதும் நல்ல விளைச்சலைத் தந்து பசி போக்கிய இறைவனுக்கு அறுவடையின் முதல் பலனை காணிக்கையாகக் கொடுத்து நன்றி செலுத்துகின்றோம். நம்மோடு சேர்ந்து நன்கு விளைந்த நெற்கதிரும் தனது உச்சந்தலை நிலம் குத்த வளைந்து பணிந்து தன்னை வளர்த்து, மக்களின் பசி போக்க தனக்கு வாய்ப்பு கொடுத்த இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றது. இது காணக்கிடைக்காத அற்புதமான அருமையான காட்சி விழாவாகும்.

தமிழினம், நன்றியுள்ள அன்பான இனம். பிறருக்காகத் தன்னையே இழக்கவும் தயாராய் இருக்கும் பேரினம். மூத்த குடி, இந்தயா முழுவதும் பரந்து வாழ்ந்த பேரினம். வந்தாரையும், வந்தேரிகளையும் வாழ வைப்பதோடு, அவர்கள் தன்னை ஒடுக்கி, அடக்கி, மூலையில் தள்ளி தன்மேலே உட்கார்ந்து வச்சு செய்தாலும், பொறுத்துக் கொண்டு அவர்களுக்கும் உணவளிக்கும் பெருந்தன்மைப் பேரினம். இப்படிப்பட்ட பேரினத்தை, ஏமாளியை இந்தப் பூமிப் பந்தில் வேறு எங்கும் காண முடியாது.

அப்படிப்பட்ட இந்தத் தமிழினம்... தனக்காக, தன்னோடு பாடுபட்ட கால்நடைகளை மறப்பார்களோ.

இறைவனுக்கு நன்றி செலுத்தியபிறகு, அடுத்த நாள் மாடுகளைக் கொண்டாடி அவைகளுக்கு நன்றி சொல்ல மாட்டுப் பொங்கலைக் கொண்டாடுகின்றார்கள். அந்த

நாளில் மாடுகளுக்கு ராஜ மரியாதையும், மற்ற நாட்களைவிட இந்த நாளில் அவைகளுக்கு ராஜ விருந்தும் படைக்கின்றார்கள். அவற்றுக்கு வண்ணம் பூசுவதென்ன? தரும் விருந்தென்ன? அவற்றோடு நீயா? நானா? என்ற மல்லுக்கட்டும் ஜல்லிக் கட்டென்ன... அப்பப்பா... உலகமே இதைப் பார்க்க, வியக்க தமிழகத்திற்கு வருகின்றது.

அடுத்ததாக உழவர் திருநாளைக் கொண்டாடுகின்றது. இந்த விழா உலகத்திற்கு நன்றியைக் கற்றுக் கொள் என்று செய்தி சொல்லும் விழா. விவசாயிகளை மதிக்கவும், வருடம் முழுவதும் உணவளிக்க உழைக்கும் உழவர்களை போற்றவும், அவர்களுக்கு நன்றி சொல்லி, அவர்களுக்காக செபிக்கவும் விழிப்புணர்வைத் தருகின்ற விழாவாகும். இந்த நாளில்தான் உலகம் அவர்களுக்கு நன்றி சொல்லும் உன்னதமான விழா.

அவர்கள் சேற்றில் உழன்றால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் அல்லவா?

இந்த மூன்று விழாக்களுமே நன்றி என்ற உன்னதமான உணர்வைக் கற்கவும், கடைப்பிடிக்கவும் கற்றுத்தரும் விழாக்களாகும்.

பணிவு உள்ள உள்ளத்தில்தான் நன்றி என்ற பேருணர்வு ஊற்றெடுக்கும். உணர்வற்ற உடம்பு எதற்கும் பணியாது. அதனால் பிறரைப்பற்றிய அக்கறை இருக்கவே இராததால், நன்றியுணர்வு இருக்கவே இராது.

உலக மாந்தர் அனைவருக்கும் உணவளிக்க சேற்றிலும், மழையிலும், காட்டிலும், மேட்டிலும் உருக்குழைந்து, உழைக்கும் இந்த உழவர் பெருந்தகைகளே இறையடியார்கள். இயற்கையைப் போல, போற்றிக் கொண்டாடப்பட வேண்டியவர்கள்.

பிறரை வாழ வைக்க எப்போதும் வறுமையில் வாடுவதும், கடன் தொல்லையால் தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்ளும் உழவர்களைக் கொண்ட நாடு சாபத்துக்குள்ளாகும்.

எப்பொழுது ஒரு நாடும் அந்த நாட்டு மக்களும் உழவர்களைப் போற்றிப் பாதுகாக்கின்றதோ அந்த நாடுதான் சொர்க்க பூமியாகும்.

ஆனால் இங்கு விளைவிப்பவன் வறுமையிலும், வியாபாரிகள் வளமையிலும் இருக்கும அவலம் எப்போது மாறுகின்றதோ... அப்போதுதான் அந்த நாடு உண்மையில் சமூக நீதி கொண்ட நாடாக மாறும் என்ற படிப்பினைகளை கற்றுத் தருகின்றன இந்த விழாக்கள்.

ஒவ்வொரு சோற்றுப் பருக்கையும், வியர்வையில், வேதனையில், விளைந்தவை என்பதை நாம் அனைவரும் உணர்ந்து அவற்றை நன்றியோடும், தெய்வ பயத்தோடும் கொண்டாடும் மனமே இன்றையத் தேவை.

பிறரை வாழ வைக்க வாழும் வாழ்வுதான் ஆகச் சிறந்த வாழ்வு என்பதை இந்த விழாக்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

பிறரை உங்களை விட உயர்ந்தவராகக் கருதுங்கள். பணிவிடை பெறுவதை விட, பணிவிடை புரியுங்கள் என்ற திருவிவிலிய தெய்வ வாக்குகள்தான் இந்த விழாக்கள் நமக்குத் தரும் செய்திகள்.

விவேகானந்தர் வாழ்வில் நடந்த ஒரு சிறப்பான சம்பவத்தை இந்தத் தலையங்கத்தில் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

இது நடந்தது 1902ம் ஆண்டு ஜுலை 2ம் தேதி புதன் கிழமையன்று. விவேகானந்தர் அவர்கள் மேலூர் என்ற மடத்தில் வசித்து வந்தார். அவர் ஒவ்வொரு புதன் கிழமையன்று உண்ணா நோன்பிருந்தார். நோன்பு இருக்கும்போதுதான் உணவின் மதிப்பும், அந்த உணவிற்குப் பின்னால் உழைக்கின்ற அனைவரையும் மதிப்போடும், நன்றியோடும் நினைக்க வைக்கும். பிறரின் பசிக் கொடுமையையும் உணரவும், அவர்களின் பசி போக்க நாமும் நற்பணிகளைச் செய்ய வேண்டும் என்ற பணியுணர்வும் நமக்கு வரும்.

அவ்வாறு விவேகானந்தர் அவர்கள் உபவாசம் இருந்த் தினத்தன்று அவரது சிஷ்யை நிவேதிதா அவர்கள் அவரைப் பார்க்க அந்த மடத்திற்கு வந்தார். விவேகானந்தர் அவரை வரவேற்று உணவு அருந்தும் அறைக்கு அழைத்துச் சென்று அவரை அமர வைத்து அவருக்கு அவரே உணவு பரிமாறினார். நிவேதிதா கூச்சத்தோடு உணவருந்தினார். சாப்பிட்டு முடித்தபின் கை கழுவ வெளியே

rawpixel

சென்றார். விவேகானந்தரும் அவர் பின்னே சென்று அவர் கைகளைக் கழுவ தண்ணீர் ஊற்றினார்.

அப்போது அவரது சிஷ்யை நிவேதிதா, அவரைப் பார்த்து, சுமாமிஜி, எங்கள் குருவாகிய உங்களுக்குத்தான் சிஷ்யையாகிய நான் பணிவிடை புரியவேண்டும். ஆனால், நீங்களே எனக்கு உணவு பரிமாறியதோடு நில்லாமல், என் கைகளைக் கழுவ தண்ணீரையும் ஊற்றி உதவி செய்கின்றீர்களே என்றாராம்.

அதற்கு விவேகானந்தர், ஏன், இயேசு கிறிஸ்து தன் சீடர்களின் பாதங்களைக் கழுவினார் என்பதை நீ அறியாயா? என்று கேட்டார். அப்போது அந்த சிஷ்யை, இயேசு தனது கடைசிக் காலத்தில்தானே அதை செய்தாரே என்று அவரிடம் செல்ல நினைத்தார், ஆனால் அதை அவரிடம் கேட்க அஞ்சினார். ஆனால் அதை அவரிடம் கேட்கவில்லை.


ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்றால்... அதற்கடுத்த மூன்றாம் நாள் அதாவது வெள்ளிக் கிழமையன்று விவேகானந்தர் மகாசமாதி அடைந்தார் என்பது வரலாறு.

விவேகானந்தர் சொன்ன மாபெரும் செய்தி ஒன்று உண்டு. நீங்கள் ஒரு கடவுளை எவ்வளவு வேண்டுமானாலும் கற்பனை செய்து கொள்ளுங்கள். அப்படிப்பட்ட ஒருவர் இயேசு கிறிஸ்துவாகத்தான் இதுப்பார் என்று அவர் கூறினார்.

அதுமட்டுமல்ல, தன் சீடர்களுக்கு தான் சாவதற்கு முன் அவர் இயேசுவின் பணிவைத்தான் கற்றுக் கொடுத்துச் சென்றார்.

பிறரின் நல்வாழ்வை விரும்பும் அனைவரும், அது உழவராகட்டும், மாடுகளாகட்டும், எவராக இருந்தாலும் அவர்கள் தெய்வப் பிறவிகளே. புனித மனிதர்களே.





# விவிலியம் அறிவோம்-73

அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## திருஉறைவிடம் (விப 25-31)

விடுதலைப் பயணம் நூலில் இதுவரை நாம் சந்தித்த நிகழ்வுகள் அல்லது வாசித்த பாடங்கள் அனைத்தும் வேகமாகச் சென்றுகொண்டிருந்தன. விப 25 வது பிரிவிற்குப் பிறகு வருகின்ற பகுதிகள் ஒரு புதிய பார்வையைக் கொண்டதாக, மெதுவாக நகர்கின்ற பாடங்களாக இருக்கும். விப 25 லிருந்து 40 வரையுள்ள பிரிவுகள், குறிப்பாக விப 25-31 மற்றும் 35-40 பிரிவுகள் இஸ்ரயேல் மக்களின் வழிபாட்டிற்கான சந்திப்புக் கூடாரம் அல்லது திருஉறைவிடம் பற்றி விரிவாகப் பேசுகின்றன. இடையில் வருகின்ற மூன்று பிரிவுகள் விப32-34, இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கையை மறந்து பொற்கன்றுக் குட்டியை வழிபடுகின்றதைக் கூறுகின்றன. விப 25-31 வரையுள்ள பிரிவுகள்; சந்திப்புக் கூடாரம் அல்லது திருஉறைவிடம் எப்படியிருக்கவேண்டும், அதில் என்னென்ன வைக்கப்பட வேண்டும், எதனால் கட்டப்படவேண்டும் போன்ற கடவுளின் வெளிப்பாட்டைக் கொண்டதாக உள்ளன. விப 35-40 பிரிவுகள் திருஉறைவிடம் கட்டப்பட்டு அர்ப்பணிக்கப்படுவதையும் கடவுளின் மாட்சி அதன் மேல் இறங்கி வருவதையும் விவரிக்கிறது. இன்றைய வாசகர்களுக்கு இந்தப் பிரிவுகளை வாசிப்பது சோர்வை ஏற்படுத்தலாம்; நேரத்தை வீணடிப்பதாகக் கருதச் செய்யலாம். ஆனால் விடுதலைப் பயணம் நூலைத் தொகுத்த ஆசிரியர் இப்பகுதிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து எழுதியிருக்கிறார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அதுவே இந்தப் பாடத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது.

கடவுள் மோசேயிடம், திருஉறைவிட அமைப்பையும் அதன் அனைத்துப் பொருள்களின் அமைப்பையும் நான் உனக்குச் சொல்லிக் காட்டுகிறபடியெல்லாம் செய்யுங்கள் (விப 25:9) எனக்கூறி அவை எவ்வாறு செய்யப்படவேண்டும் எனக் கூறுகிறார். மேலும் மலையில் உனக்குக் காண்பிக்கப்பட்ட முறைப்படி நீ இவற்றைச் செய்யுமாறு கவனித்துக்கொள் (25:40) எனவும்; கட்டளையிடுகிறார். கடவுள் கூறுகின்ற இந்தத் திருவுறைவிடத்தின் அமைப்பு கடவுள் மண்ணில் மக்களுடன் வாழ்வதற்கான உறைவிடம். இந்த உறைவிடம் கடவுளின் விண்ணுலக உறைவிடத்தின் நகலாக உள்ளது எனக் கூறலாம். இந்த உறைவிடம் சில நேரங்களில் சந்திப்புக் கூடாரம் எனவும் சில நேரங்களில் திருஉறைவிடம் எனவும் இப்பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. குருக்கள் மரபிலிருந்து வருகின்ற இப்பகுதியில் கொடுக்கப்படுகின்ற திருஉறைவிடத்தின் அமைப்பு எருசலேம் கோவிலின் அமைப்பைப் பிரதிபலிக்கிறது. பெரும்பாலான அறிஞர்களின் கருத்துப்படி திருஉறைவிடத்தின் அமைப்பு எருசலேம் கோவில் கட்டப்பட்டபின் பழக்கத்திலிருந்த வழிபாட்டு முறைகளை நினைவுகூரும் விதத்தில் அமைந்திருக்கிறது. கி.மு. 586 ஆம் அண்டு யூதா அரசு பாபிலோனியர்களால் வீழ்ச்சியடைந்தது. பெரும்பாலான மக்கள் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டனர். பாரசீக மன்னன் சைரசு பாபிலோனைக் கைப்பற்றியபோது யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பிச் செல்லவும் எருசலேம் கோவிலை மீண்டும் கட்டியெழுப்பவும் அனுமதி அளித்தான். எருசலேமுக்குத் திரும்பிவந்த யூதர்கள் பாபிலோனியர்களால் அழிக்கப்பட்ட எருசலேம்

கோவிலை மீண்டும் கட்டியெழுப்பினர். கோவில்; கட்டி முடிக்கப்பட்டபின் வழிபாடுகள் முறைப்படுத்தப்பட்டு தொடர்ந்தன. எருசலேம் கோவிலில் நடத்தப்படும் வழிபாடுகள் நாட்டின் முதன்மையான கடமையாகக் கருதப்பட்டது. எனவே இந்த வழிபாடுகள் மோசே காலத்திலேயே பின்பற்றப்பட்டு வந்த வழிபாடுகள் என விடுதலைப் பயணம் நூலைத் தொகுத்த குருக்கள் மரபு ஆசிரியர்கள் காட்ட விரும்பினர். எனவே மோசே காலத்தில் உடன்படிக்கைப் பேழை எவ்வாறு வைக்கப்பட்டிருந்தது என்பதை நினைத்துப் பார்த்து, கோவிலில் நடந்த வழிபாடுகளை ஏற்றிப்பதிவு செய்கின்றனர்.

மோசேயால் பாலைவனத்தில் நிறுவப்பட்ட சந்திப்புக் கூடாரம் எளிதில் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் சுமந்து செல்லக் கூடிய கூடாரம். பாலைவனப் பயணத்தின் போது இஸ்ரயேல் மக்கள் கூடாரங்களில் வாழ்ந்தனர். அவர்களின் கூடாரத்தைப் போல கடவுளுக்கும் ஒரு கூடாரம் அமைத்து உடன்படிக்கைப் பேழையை அங்கே வைத்தனர். பாலைவனத்தில் நாடோடி மக்களாக வாழ்ந்த மக்களினங்களும் இத்தகையப் பழக்கங்களைக் கொண்டிருந்தனர். தாங்கள் கூடாரம் அமைத்து குடியிருந்த பகுதியில் அவர்கள் வழிபடும் தெய்வத்திற்கும் கூடாரம் அமைத்தனர். இந்தக் கூடாரத்தை சிவப்பு நிறத் தோலினால் அமைத்தனர். தங்கள் கடவுளர்களின் கற்சிலைகளை அதில் வைத்தனர். தங்கள் பயணத்தின்போது கடவுளைச் சந்திப்பதற்கும், அவருடைய பிரசன்னத்தை உணர்வதற்கும் அவற்றைப் பயன்படுத்தினர். இஸ்ரயேல் மக்களும் கடவுள் அவர்கள் நடுவில் வாழ்கிறார் என்பதற்கு அடையாளமாக இந்தச் சந்திப்பு கூடாரம் அல்லது திருஉறைவிடத்தை அமைத்தனர் எனக் கூறலாம். குருக்கள் மரபு ஆசிரியரிடமிருந்து வருகின்ற இப்பகுதியில் திருஉறைவிடம் அமைப்பது கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு செய்தியாக உள்ளது.

சீனாய் மலையின் உச்சியில் மோசே கடவுளின் திருமுன்னிலையில் இருக்கும்போது திருஉறைவிடம் அமைப்பது பற்றிய செய்திகளைக் கடவுள் வெளிப்படுத்துகிறார் (25:31).எனவே திருஉறைவிடம் சம்பந்தமான அனைத்தும் மனிதர்களால் தீர்மானிக்கப்படவில்லை; கடவுளால் தீர்மானிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. முதலில் திருஉறைவிடம் அமைப்பதற்கான பொருள்களை மக்களிடமிருந்து காணிக்கையாகப் பெற ஆண்டவர் மோசேயிடம் கூறுகிறார் (25:1-7). பொன், வெள்ளி, வெண்கலம், மரம் மற்றும் மாணிக்கக் கற்கள் ஆகியவை அவற்றில் முக்கியமானவை. மேலும் உடன்படிக்கைப் பேழை, திருஉறைவிடம் கட்டுவதற்கான தூண்கள், நூலாடைகள், தோரணங்கள், குருக்களுக்கான உடைகளில் பொருத்தப்பட வேண்டிய மாணிக்கக் கற்கள் போன்றவற்றையும் காணிக்கைகளாகப் பெற அண்டவர் அறிவுறுத்துகிறார். ஆண்டவர் அவர்கள் நடுவில் தங்கவேண்டும் என்பதற்காகவே திருஉறைவிடம் அமைக்கப்படுகிறது. இரண்டாவதாக, திருஉறைவிடத்தில் வைக்கவேண்டிய முக்கியப் பொருளான உடன்படிக்கைப் பேழைபற்றிப் பேசுகிறார்.உடன்படிக்கைப் பேழை விலையுயர்ந்த சித்திம் மரத்தினால் செய்யப்பட்ட செவ்வக வடிவத்திலான ஒரு பெட்டி. அந்தப் பெட்டி இரண்டரை முழம் நீளமும், ஒன்றரை முழம் அகலமும், ஒன்றரை முழம் உயரமும் கொண்டதாக இருந்தது. சித்திம் மரத்தினால் செய்யப்பட்ட இந்தப் பெட்டி பசும் பொன்னால் உள்ளும் புறமும் வேயப்பட்டிருந்தது. பேழையின் நீளத்திற்கும் அகலத்திற்கும் ஏற்ப பேழையின் மேல் பகுதியில் இரக்கத்தின் இருக்கை ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. இரக்கத்தின் இருக்கையின் ஓரங்களில் இரண்டு பொன் கெருபுகள் செய்து வைக்கப்பட்டன. உடன்படிக்கைப் பேழை கடவுளின் பிரசன்னத்தின் அடையாளமாக இருந்தது. இரக்கத்தின் இருக்கையில் இருந்துகொண்டு கடவுள் மோசேயுடன் பேசுவார்.

மூன்றாவதாக, திருமுன்னிலை அப்பம் வைப்பதற்கான அப்பமேசைபற்றிப் பேசுகிறார். இந்த மேசையும் சித்திம் மரத்தினால் செய்யப்பட்டு, பசும்பொன்னால் பொதியப்படவேண்டும். மேலும் அப்பமேசையின் அளவுகள், அமைப்புமுறை, மேசையில் பயன்படுத்தப்படவேண்டிய ஏனைய உபகரணங்கள் பற்றியும் ஆண்டவர் மோசேயுடன் பேசுகிறார். நான்காவதாக, ஏழு கிளைகளையுடைய விளக்குதண்டு, மற்றும் அணையா விளக்குபற்றி ஆண்டவர் மோசேயிடம் பேசுகிறார். ஐந்தாவதாக, திருஉறைவிடத்தின் அமைப்பு மற்றும் அமைக்கப்படவேண்டிய முறை அனைத்தையும் ஆண்டவர் மோசேயிடம் விளக்குகிறார். திருஉறைவிடம் அமைப்பதற்கான அளவுகள் மேற்காசிய நாடுகளில் அமைக்கப்பட்ட கோவில்கள், உதாரணமாக பாகால் தெய்வத்திற்குக் கட்டப்பட்ட அரண்மனை மற்றும் சாலமோன் கட்டிய எருசலேம் கோவில் (1 அரசர் 5-8) ஆகியவற்றின் அளவுகளைப் பிரதிபலிப்பதாக உள்ளது. ஆறாவதாக, பலிபீடம், திருஉறைவிட முற்றம் போன்றவை அமைக்கப்படும் முறையையும் ஆண்டவர் மோசேக்கு விளக்குகிறார். ஏழாவதாக, திருஉறைவிடத்தில் பணிபுரிகின்ற குருக்களின் உடைகள், குருக்களை திருநிலைப்படுத்தும் முறை, திருஉறைவிடத்தில் நடக்க வேண்டிய அன்றாட வழிபாடு

பற்றியகுறிப்புகள் அனைத்தையும் ஆண்டவர் மோசேக்கு வெளிப்படுத்துகிறார். திருஉறைவிடம் கட்டுவதற்கான அனைத்து அறிவிப்புகளும் இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கை விதிகளை மீறி பொற்கன்றுக் குட்டியை வழிபடுவதற்கு முன்பே நடந்து முடிந்துவிட்டன. இதைக் கடவுளின் ஓர் இரக்கச் செயல் என்றே கூறலாம்.

மோசே கடவுளுடன் மலையில் இருந்த காலத்தில் மக்கள் பொற்கன்றுக் குட்டியைச் செய்து வழிபடுவதால் ஆண்டவர் கோபமடைந்து அவர்களை அழித்தொழிக்க விரும்புகிறார். ஆனால் மோசேயின் வேண்டுதல் அவரது கோபத்தைத் தணிக்கிறது. ஆண்டவர் தன் வாக்குறுதியில் நிலையாக இருக்கிறார். இஸ்ரயேல் மக்களுடன் அவர் செய்துகொண்ட உடன்படிக்கையைப் புதுப்பிக்கிறார். ஆண்டவர் முதலில் எழுதிய கற்பலகைகளை மோசே உடைத்த பின்பும் இரண்டாவதாக மீண்டும் அந்தக் கட்டளைகளை புதிய கற்பலகைகளில் எழுதிக்கொடுக்கின்றார். மோசே அந்தக் கற்பலகைகளுடன் கீழே வருகின்றார். மோசே இரண்டாவது முறையாக மலையிலிருந்து ஆண்டவர் கையினால் எழுதப்பட்ட கற்பலகைகளுடன் கீழே வந்தபின் திருஉறைவிடம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படுகின்றன். திருஉறைவிடம் அமைப்பதற்கான பொருள்களை மக்களிடமிருந்து மோசே காணிக்கையாகக் கேட்டுப் பெறுகின்றார். மக்களும் தாராள மனத்துடன் தேவையான பொருள்களைக் காணிக்கைகளாகவும் அன்பளிப்புகளாகவும் கொடுக்கின்றனர் (விப 35:4-29). மக்களின் இந்த தாராள மனநிலைக்கு பல காரணங்கள் இருக்கலாம். குறிப்பாக, பொற்கன்றுக்குட்டியைச் செய்து வழிபட்டதால் ஆண்டவரின் கோபத்திற்கு ஆளானது ஒரு காரணமாக இருக்கலாம். சந்திப்புக் கூடாரத்திற்குத் தேவையான பொருள்கள் எல்லாம் பெற்றபின் கடவுளின் கட்டளைப்படியே பெட்சலேல் மற்றும் ஓகொலியாகுபு ஆகியோர் திருஉறைவிடம் கட்டும் பணியில் ஈடுபடுகின்றனர். அதை வெற்றிகரமாகச் செய்து முடிக்கின்றனர் (விப 35:30-36:38). எல்லாப் பணிகளும் முடிந்தபோது (விப 39:32-43) மோசே திருஉறைவிடத்தை கடவுளுக்கு அர்ப்பணிக்கிறார். திருஉறைவிடம் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டபோது கடவுளின் மாட்சி திருஉறைவிடத்தை மூடுகிறது (விப 40:1-38). திருஉறைவிடத்தை மூடுகின்ற கடவுளின் மாட்சி கடவுளின் பிரசன்னத்தை வெளிப்படுத்தும் அடையாளமாகஉள்ளது,

இஸ்ரயேல் மக்களின் பாலைவனப் பயணத்தின்போது திருஉறைவிடம்தான் அவர்கள் கடவுளை வழிபடுகின்ற இடமாக இருந்தது. விவிலியத்தை ஆய்வு செய்கையில் திருஉறைவிடத்தில் உடன்படிக்கைப் பேழை, திருமுன்னிலை அப்பத்தைக் கொண்டிருக்கும் அப்ப மேசை, ஏழு கிளைகளை உடைய விளக்குத்தண்டு, பலிபீடம், அணையாவிளக்கு, அற்புதமாக துளிர்விட்டிருந்த ஆரோனின் கோல் (எண் 17:8), குருக்கள் பயன்படுத்தும் பாத்திரங்கள், பாலைவனத்தில் மக்களின் பசியாற்றிய மன்னா (விப 16:33-34) மற்றும் மோசே எழுதிய உடன்படிக்கை ஏடு ஆகியவை வைக்கப்பட்டிருந்தன என அறிய வருகிறோம். திருஉறைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த உடன்படிக்கைப் பேழைதான் கடவுளின் பிரசன்னத்தை வெளிப்படுத்தும் அடையாளமாக இருந்தது. திருஉறைவிடம் அமைக்கப்பட்டபின் மோசே கடவுளை சந்திக்கும் இடமாக திருஉறைவிடம் மாறுகிறது. பாலைவனப் பயணம் முழுவதும், மோசே இறப்பதுவரை திருஉறைவிடம் அவர் கடவுளைச் சந்திக்கும் இடமாக இருந்தது. வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிய பயணத்தின் போது திருஉறைவிடம் பிரிக்கப்பட்டு சுமந்து செல்லப்பட்டது. எங்கெல்லாம் மக்கள் பயணித்தார்களோ அங்கெல்லாம் கொண்டு செல்லப்பட்டது. மக்கள் ஓர் இடத்தில் பாளையமிறக்கித் தங்கியபோது திருஉறைவிடம் அங்கே அமைக்கப்பட்டது. மோசேயின் ஊழியாரான யோசுவா திருஉறைவிடத்தைக் காப்பவராகச் செயல்படுகின்றார்.

பயணம் தொடரும்...








மறையுரை வழங்குபவர்

அருள்முனைவர். **இ.ஸ்டேன்லி ராபின்சன்**

M.A.(Phil)., M.A.(Phil.lic).,M.A.(Chris).,Dip Pas Coun, M.Sc (Psy)., MBA., MPhil., Phd.

பங்குத்தந்தை

**புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம்**

பழனி, திண்டுக்கல் மறைமாவட்டம்


# பொதுக்காலம் 2–ஆம் வாரம்
# தைப் பொங்கல் திருவிழா
## 15–01–2023

முதல் வாசகம்

**எசாயா 49:3, 5–6 – 1**

இரண்டாம் வாசகம்

**கொரிந்தியர் 1:1–3**

நற்செய்தி வாசகம்

**யோவான் 1:29–34**

# நாயிறு மறையுரை

இறை இயேசுவிலே பிரியமானவர்களே, இன்றைய முதல் வாசகத்தில் கடவுளுடைய பார்வையில் நாம் மதிப்புப் பெற்றவர்கள் என்ற மாபெரும் மகிழ்ச்சியான செய்தியானது கோடிட்டுக் காட்டப்படுகின்றது. எனவே நாம் நம்முடைய சிந்தனை, சொல், செயல் வழியாக கடவுளை மாட்சிப்படுத்துகின்றவர்களாக வாழ வேண்டும். இதன் மூலம் நாம் புறவினத்தாருக்கு ஒளியாக இருக்க முடியும்.

இரண்டாம் வாசகம் நாம் கடவுளால் அவர் மக்களாக இருக்க அழைக்கப்பட்டிருக்கின்றோம். எனவே நாம் தூயவர்களாக வாழ வேண்டும் என்றும், இந்தத் தூய வாழ்வானது எல்லா இடத்திலும் இயேசு கிறிஸ்துவை நாம் அறிக்கையிட வேண்டும் என்று அறிவுறுத்துகின்றது.

நற்செய்தி வாசகத்தில் மூன்று அருமையான செயல்பாடுகளைத் திருமுழுக்கு யோவான் வாழ்ந்து காட்டுகின்றார்.

முதலாவது இதோ கடவுளின் செம்மறி என்று மக்களுக்கு இயேசுவைச் சுட்டிக் காட்டுகின்றார். சுட்டிக் காட்டுதல் என்பது ஒன்றை அல்லது ஒருவரைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டுதல் (சுட்டுதல்) மற்றும் ஒரு கருத்தை தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டுதல், எடுத்துக் காட்டுதல். நம் வாழ்க்கையில் நாம் பலவற்றை அல்லது பல நபர்களை சுட்டிக்காட்டுகின்றோம். இனியும் சுட்டிக் காட்டுவோம். நம்முடைய சுட்டிக் காட்டுதல் நேர்மையானதாக, நேர்மையாளர்களை, நல்லவற்றை, நல்ல விசயங்களை சுட்டிக் காட்டுவதாக இருக்கின்றதா? அல்லது எதிர்மறையான விசயங்களைச் சுட்டிக் காட்டுவதாக இருக்கின்றதா? யோவானைப் போல் இயேசுவை, இயேசு வாழ்ந்து நமக்குக் கற்றுக் கொடுத்த மதிப்பீடுகளை சுட்டிக் காட்டுபவர்காளக வாழ்வோம்.

இரண்டாவதாக திருமுழுக்கு யோவான் இயேசுவை வெளிப்படுத்துகிறார். வெளிப்படுத்துதல் என்பது யாரும் இதுவரை அறியாத ஒன்றை, மக்களுக்கு தெரியப்படுத்துதல். யோவான் மக்களிடையே இருந்த இயேசுவை மக்களுக்கு வெளிப்படுத்துகிறார். யோன் இயேசுவுக்கு முன்னோடியாக மட்டுமல்ல மக்களிடையே இருந்த, மக்களால் அறிப்படாத இயேசுவை மக்களுக்கு வெளிப்படுத்தும் உன்னதமாக நற்செய்திப் பணியைச் செய்கின்றார். நாம் நல்வாழ்வில் யாரை? எதை வெளிப்படுத்துகின்றோம்? பிறரிடத்தில் இருக்கின்ற நிறைகளை வெளிப்படுத்துகின்றோமா? அல்லது குறைகளை வெளிப்படுத்துகின்றோமா? யோவானைப் போல நம்மிலும், பிறரிடத்திலும் இருக்கின்ற இயேசுவை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவோம்.

மூன்றாவதாக யோவான் சான்று பகர்கின்றார். கிறிஸ்தவ வாழ்வு என்பது அடிப்படையில் சான்று பகர்கின்ற வாழ்வு. நம் வார்த்தையாலும்,

வாழ்வாலும் இயேசுவுக்குச் சான்று பகரும் வாழ்வு. நம் வாயிலிருந்து வருகின்ற ஒவ்வொரு வார்த்தையும் இயேசுவுக்குச் சான்று பகர வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் இயேசுவுக்குச் சான்று பகர வேண்டும். அதுவே உண்மையாக அர்த்தமுள்ள கிறிஸ்தவ வாழ்வாக இருக்க முடியும்.

இன்று நாம் தமிழர் விழாவாம் தைப் பொங்கல் விழவைச் சிறப்பிக்கின்றோம். உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், நம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும் நமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழா. வாழ்வளித்த படைப்பின் இறைவனுக்கு அறுவடையின் முதற்கனியை அளித்து நன்றியைத் தெரிவிக்கும் விழா.

நாமும் இயேசுவின் முன்னோடியான திருமுழுக்கு யோவானைப்போல் நம்மிலும், பிறரிலும் இருக்கின்ற இயேசுவைச் சுட்டிக் காட்டி வெளிப்படுத்தி, சான்று பகர்கின்ற வாழ்க்கை வாழவோம்.

இவ்விழா கிறிஸ்தவர்களின் திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்து உயிர்தெழுதலில் அவர் நம்பிக்கையை உறுதிப்படுத்தி விண்ணுலக வாழவை இம்மண்ணுலகிலேயே முன்சுவையாக அனுபவிக்க உதவுகின்றது. அத்தகைய நன்றி நிறைந்த உள்ளங்களோடு.

— ஆமென்






# பொதுக்காலத்தின் 2-ஆம் ஞாயிறு

எசா 49:3,5-6, 1 கொரி. 1:1-3, யோவா. 1:29-34

15-01-2023

## திருப்பலி முன்னுரை



பா. சேவியர்
திண்டுக்கல்

இயேசுக் கிறிஸ்துவோடு இணைக்கப்பெற்று, அவரை அறிக்கையிடவும், இறைமகன் இயேசுவுக்கு சான்று பகரவும் உரிமை பெற்ற அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு திருவழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

திருமுழுக்கால் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்ட நாம் அதை பாதுகாப்பதுடன், மேன்மேலும் வளர்ச்சி அடைந்து, மேலும் தூயவராகும்படி அழைக்கப் பட்டுள்ளோம்.

உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் செம்மறியாம் இயேசுவைக் குறித்தும், அவருக்கு சான்று பகர்ந்து வாழ்வது குறித்தும் எடுத்துரைத்து இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுகின்ற ஊழியருக்குரிய மனப்பான்மையை நம் நெஞ்சங்களில் விதைக்கிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

என்னிலும் முன்னிலை பெறுபவர், எனக்கு முன்பே இருப்பவர், கடவுளின் ஆவியை நிறைவாய் பெற்றவர் என்று இறை இயேசுவின் பெயருக்கு சான்று பகர்கின்றார் தூய திருமுழுக்கு யோவான்.

இயேசு கிறிஸ்து இறைவனின் செம்மறி, மனிதரின் வாழ்வுக்காக, மகிழ்வுக்காக, உரிமைக்காக தன்னையே அர்ப்பணித்தவர். இன்றும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர். அவரைப் போல் நாம் பிறர் மீட்புக்காக நம்மையே அர்ப்பணிக்கும் ஊழியர்களாக வாழவும், திருமுழுக்கு யோவானைப் போல் சான்று பகர்ந்து வாழவும் இன்றைய திருப்பலி வழியாக உறுதி ஏற்போம். அதற்காக இறையருளை வேண்டி இத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

யாக்கோபை தம்மிடம் கொண்டு வரவும், சிதறுண்ட இஸ்ரயேலரை ஒன்று திரட்டவும் இறைவனுக்கு ஏற்புடைய ஊழியனை எசாயா அறிமுகப்படுத்துகின்றார். இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இவ்வூழியன் அனைத்து மக்களின் மீட்பாவார், ஒளியாவார் என்று இறைவாக்கினர் எசாயா பாடும் ஆனந்த பண்ணை ஆர்வமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

கொரிந்தியத் திருச்சபைக்கு அறிவுரை கூறியும், வேத உண்மைகளை விளக்கியும் தூய பவுல் அடிகள் எழுதிய திருமுகத்தின் தொடக்கச் செய்தி இன்றைய இரண்டாம் வாசகமாக அருளப்பட்டுள்ளது. நாம் பாவிகளாய் இருந்தாலும், இறைவனது பார்வையில் நாம் விலையேறப் பட்டவர்களாகவும், தூயவர்களாகவும் இருப்பதை சுட்டிக் காட்டும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1. அருட்கொடைகளை வழங்கி பரிபாலிக்கும் இறைவா, தொண்டாற்றும் கொடை, இறைவாக்குரைக்கும் கொடை, அன்பால் பராமரிக்கும் கொடை போன்ற இணையற்ற அருட் கொடைகளைப் பெற்று, அருட்பணி ஆற்றிவரும் எமது திருத்தந்தை பிரான்சிஸ், எமது ஆயர்கள் மற்றும் அருட்பணியாளர் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அருட்கொடைகளை தக்க முறையில் பயன்படுத்தி, திருப்பணி ஆற்றி, உமது அரசை நிறுவ அவர் களுக்குத் தேவையான ஆற்றலையும், உடல் நலத்தையும் நிறைவாகத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

.

2. சீயோனிலிருந்து ஆசி வழங்கும் தந்தையாம் இறைவா, திருமுழுக்கு யோவானைப் போல் இயேசுவுக்கு சான்று பகர்ந்து வாழ அழைக்கப் பட்டிருக்கிறோம் என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து, எங்கள் சொல்லாலும், செயலாலும், வாழ்க்கை முறையாலும் சிதறுண்டு கிடக்கும் மக்களை ஒன்று சேர்க்கவும், நீர் அருளும் மீட்பு எல்லா மக்களுக்கும் கிடைக்கும்படி வாழவும் வரம் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. எம்மைப் படைத்து காத்து வழி நடத்திவரும் அன்பு இறைவா, நாட்டை ஆள்வோரை உம் திருக்கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். நாட்டின் ஒற்றுமைக்கும், இறையான்மைக்கும், மதநல்லிணக்கத்திற்கும் பங்கம் விளைவிக்காத சட்டதிட்டங்களை இயற்றி, வேற்றுமையில் ஒற்றுமை என்ற உலகமே வியந்து போற்றும் பண்பாட்டினை கட்டிக் காத்திடும் நல்ல தலைவர்களாய் அவர்கள் விளங்கிட அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பும் கருணையும் நிறைந்த இறைவா, எங்கள் குடும்பங்களின் தேவைகளை நீர் அறிவீர், எது எது எங்களுக்கு தேவையோ, எவை எவை எங்களுக்கு அவசியமோ அவற்றை யெல்லாம் எங்களுக்குத் தந்தருளும், எங்கள் குடும்பங்களில் அன்பும் பண்பும் மலர்ந்து மணம் வீசவும், ஒருவரை யொருவர் புரிந்து வாழவும் தேவையான ஞானத்தையும் விவேகத்தையும் எம்மீது பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# திருக்குறள் வழங்கும் சமூக நெறிச் சிந்தனைகள்

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM



## குறள் – 28

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

### குறள் விளக்கம்

பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மறை மொழிகளே காட்டிவிடும்.

### சிந்தனை

**நிறைமொழி மாந்தர் யார்?**

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்த மறைமொழி தானே மந்திரம் என்ப என்கிறார் தொல்காப்பியர். அதாவது, சொல்லிய சொல்லின் பொருண்மை பாண்டும் குறைவின்றிப் பயன்தரச் சொல்லும் ஆற்றலுடையவரே நிறைமொழி மாந்தர் ஆவார்.

புகழ்பெற்ற எழுத்தாளர் எர்னெஸ்ட் ஹெடிஸ்லே, தன் தலைசிறந்த படைப்புகள் அனைத்தையும் போட்டு வைத்திருந்த பெட்டியை தொலைத்தார். அத்தனையையும் மறுபடி எழுத முடியாது என்று வருந்திய போது, புகழ்பெற்ற கவிஞர் எஸ்ரா பவுண்ட் சொன்னார்: நீங்கள் அதிர்ஷ்டசாலி, இப்போது திரும்ப யோசித்தால் உங்கள் படைப்புகளின் பலமான அம்சங்கள் மட்டுமே நினைவில் இருக்கும். பலவீனமானவை மறந்திருக்கும். திரும்ப எழுதுங்கள். உங்கள் படைப்பு மேலும் பொலிடையும் என்றார். திரும்ப எழுதினார், பெரும்புகழ் பெற்றார்.

வார்த்தை ஆற்றல் மிக்கது. இருபுறமும் கருக்கு வாய்ந்த வாளைவிட கூர்மையானது என வேதாகமம் கூறுகிறது. அதனால் வீணான வார்த்தைகளையும் கெட்ட வார்த்தைகளையும் பயன்படுத்துவதை தவிர்த்து பயனுடைய வார்த்தைகளையே பேச முன்வருவோம். அவையே நீடித்து நிலைக்கக் கூடியவை மதிப்புமிக்கவை. இதனையே, தக்க வேளையில் சொன்ன சொல் வெள்ளித்தட்டில் வைத்த பொற்கனிக்குச் சமம் என்கிறது. நீமொ 25:11.

மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே செல்வதால் பயனில்லை. அதனால் அவருடைய மூடத்தனம் தான் வெளிவரும் என்கிறார் சபைஉரையாளர். கவலை மிகுமானால் கனவுகள் வரும்: சொல் மிகுமானால் மூடத்தனம் வெளியாகும். சஉ 5:3.

வேதத்தின் பழைய ஏற்பாட்டில் உலகத்தை கடவுளின் வார்த்தை படைத்தது என்றும், புதிய ஏற்பாட்டில் கடவுளின் வார்த்தை மனுவுருவாகியது என்றும் வாசிக்கின்றோம். வாழ்வளிக்கும் வார்த்தைகள் திருவிவிலியம் முழுவதும் நிரம்பியுள்ளன. படித்து பயன்பெறுவோம்: பயனுடைய நல்ல வார்த்தைகளை மட்டும் பேசத் துணிவோம்.



சகோதரி. ரோசி. **காங்கேயம்**
புனித காணிக்கை அன்னை சபை

# சமூகமும்... சட்டமும்...

இந்தியாவில் வரதட்சணை முறை **(Dowry system in India)** மணமகளின் குடும்பம், அவரது பெற்றோர் மற்றும் அவரது உறவினர்கள் திருமணத்திற்காக, பணம் மற்றும் அசையா அல்லது அசையும் சொத்துக்களை மணமகன் வீட்டிற்குக் கொடுப்பதனைக் குறிக்கிறது. வரதட்சணை என்பது அடிப்படையில் பணம் அல்லது மணமகனுக்கு அல்லது அவரின் குடும்பத்திற்கு வழங்கப்படும் சில வகையான பரிசுகள் மற்றும் பணம், நகைகள், மின் உபகரணங்கள், தளபாடங்கள், படுக்கை, மட்பாண்டங்கள், பாத்திரங்கள், வாகனங்கள் மற்றும் பிற வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள் ஆகியவைகளைக் கொடுப்பதனையும் உள்ளடக்கியதாகும். புதுமணத் தம்பதிகள் தங்கள இல்லற வாழ்க்கையினைத் துவங்க இது வழிவகுக்கிறது. வரதட்சணை என்பது அரபியில் தகெஸ் என அறியப்படுகிறது. இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் வரதட்சணை ஆவுன்பாட் என்று அழைக்கப்படுகிறது.

வரதட்சணை முறை மணமகளின் குடும்பத்திற்கு பெரும் நிதிச்சுமையை ஏற்படுத்தும் வகையில் அமைகிறது. சில சந்தர்ப்பங்களில், வரதட்சணை முறை பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கும் வழிவகுக்கிறது, உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் காயம் முதல் இறப்புகள் வரையிலான பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு இது காரணமாக அமைகின்றது.

### வரலாற்று சூழல்

### திருமண ஊர்வலம்– பரிசுகளுடன் ஒரு விதானத்தின் கீழ் மணமகள். (1800)

மைக்கேல் விட்செல் என்பவர் பண்டைய இந்திய இலக்கியம் வேத காலத்தில் வரதட்சணை நடைமுறைகள் குறிப்பிடத்தகுந்த அளவில் இல்லை என்று கூறுகிறார். பண்டைய இந்தியாவில் பெண்களுக்கு சொத்தில் உரிமை வழங்கப்பட்டதாகவும், பெற்றோர்கள் தாங்களாகவே வழங்கியதாகவும் அல்லது ஆண் பிள்ளைகள் இல்லாத சமயத்தில் பெண் பிள்ளைகளுக்கு சொத்தில் உரிமை வழங்கப்பட்டதாக அவர் கூறுகிறார்.

மேக்டொனெல் மற்றும் கீத்தின் கூற்றும் விட்செல்லின் கருத்தோடு ஒத்துப்போகிறது, ஆனால் தம்பியாவின் கருத்துக்களில் இருந்து வேறுபடுகின்றன;அவர்கள் பிரம்மாவின் திருமணத்தில் கூட வரதட்சணை கொடுக்கப்பட்டதாக பண்டைய இலக்கியங்கள் கூறுகின்றன எனக் கூறினர். பண்டைய இந்தியாவில் பெண்களுக்கான சொத்து உரிமைகள் வழங்கப்படுவது அதிகமாக இருந்ததாக , மேக்டொனெல் மற்றும் கீத் ஆகியோர் பரிந்துரைக்கின்றனர்.

### வரதட்சணைத் தடை (திருத்த) சட்டம் 1986

இப்பிரிவின் படி எந்த ஒரு ஊடகத்திலும் வரதட்சணை கொடுப்பதாகவோ வாங்குவதாகவோ அல்லது திருமணத்திற்கு கைமாறாக சொத்தையோ பணத்தையோ வேறு பொருளாதார நன்மையையோ தருவதாக விளம்பரம் செய்யக் கூடாது. அவ்வாறு செய்தால் ஐந்து ஆண்டுகளுக்கு மிகாத சிறைத் தண்டனையும் ரூபாய் பத்தாயிரம் வரையிலான அபராதமும் விதிக்கலாம்.

பிரிவு 6 (3)–ன் படி, ஒரு பெண் திருமணமாகி ஏழாண்டுகளுக்குள் இயற்கை காரணங்களால் அல்லது வேறு காரணங்களால் இறந்து விட்டால், இப்பெண்ணுக்கு திரும்பவும் கொடுக்கப்பட்ட வரதட்சணை சொத்தானது அப்பெண்ணின் குழந்தைகளுக்கு மாற்றப்படும். குழந்தைகள் இல்லையேல் பெற்றோருக்கு உரியதாகும்.

திருப்பலி வாசகங்கள்

# பொதுக்காலம் 2-ஆம் வாரம்

15.01.2023 முதல் 22.01.2023

**15.01.2023 – பொதுக்காலம் 2-ஆம் வாரம் ஞாயிறு**

*தைப் பொங்கல்*

முதல் வாசகம் : எசாயா 49:3, 5-6
இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 1:1-3
நற்செய்தி : யோவான் 1:29-34

**16.01.2023 – திங்கள் கிழமை**

*மாட்டுப் பொங்கல்*

முதல் வாசகம் : எபிரேயர் 5:1-10
நற்செய்தி : மாற்கு 2:18-22

**17.01.2023 – செவ்வாய் கிழமை**

*உழவர் திருநாள்*

முதல் வாசகம் : எபிரேயர் 6:10-20
நற்செய்தி : மாற்கு 2:23-28

**18.01.2023 – புதன் கிழமை**

முதல் வாசகம் : எபிரேயர் 7:1-3, 15-17
நற்செய்தி : மாற்கு 3:1-6

**19.01.2023 – வியாழக்கிழமை**

முதல் வாசகம் : எபிரேயர் 7:25-8:6
இரண்டாம் வாசகம் : மாற்கு 3:7-12

**20.01.2023 – வெள்ளிக்கிழமை**

முதல் வாசகம் : எபிரேயர் 8:6ஆ-13
நற்செய்தி : மாற்கு 3:13-19

**21.01.2023 – சனிக்கிழமை**

முதல் வாசகம் : எபிரேயர் 9:2-3, 11-14
நற்செய்தி : மாற்கு 3:20-21

**22.01.2023 – ஞாயிறு**

*பொதுக்காலம் 3ஆம் வாரம்*

முதல் வாசகம் : எசாயா 9:1-4
இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 1:10-13, 17
நற்செய்தி : மத்தேயு 4:12-23



Let us remember that love lives through sacrifice and is nourished by giving. Without sacrifice, There is no Love.

- St. Maximilian Kolbe -

# நலம் தரும் இயற்கை வளம்



ஜே. அன்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்.

உறவுகளே இனிய வணக்கம். இன்றைய நலக்கல்வி..!

## வயிற்றை சுத்தம் செய்ய இந்த முறையில் முயற்சி செய்து பாருங்கள்..!

ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது நீங்கள் வயிற்றை சுத்தம் செய்தால் வேண்டும்.

வயிறு உப்பசம், வாய்வு தொல்லை, வயிறு பெருகுவது, உடல் எடை கூடுவது, அதிக மூச்சுத்திணறல் ஏற்படுவது, அதிக தொலைவு நடக்க முடியாமல் இருப்பது, முகத்தில் அதிக அளவிலான சதைகள் உருவாகுவது, பற்களில் தேவையற்ற அழுக்குகள் உருவாகுவது, போன்ற பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு வயிறு மிக முக்கியமானதாக உள்ளது.

வயிறு எப்பொழுதும் சுத்தமாக வைத்திருந்தால் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கலாம். அது மட்டுமில்லாமல் உடல் நிறத்திலும் பல்வேறு மாற்றங்களை உங்களால் காண முடியும். வயிற்றை சுத்தம் செய்வது மிகமிக முக்கியம். ஏனென்றால் வயிறு சுத்தமாக இருந்தால் உடலில் உள்ள அனைத்து பாகங்களும் சுத்தமாக இருக்கும். அதுமட்டுமில்லாமல் ரத்தத்தில் தேவையற்ற அழுக்குகள் சேர்வது குறைக்கப்படும். வயிற்றை சுத்தம் செய்ய வீட்டிலுள்ள இந்த 3 பொருட்கள் போதும்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் இதை முயற்சி செய்து பார்க்கலாம். இதனுடைய பலன்கள் ஏராளம். வயிற்றை சுத்தம் செய்ய எளிய இயற்கை வழிகள். வீட்டில் உள்ள 3 பொருட்கள் போதும். வயிறு மந்தம், பசியின்மை மற்றும் பல்வேறு பிரச்சனைகளுக்கு சரியான தீர்வு.

### வயிற்றை எப்படி சுத்தம் செய்வது?

அதாவது காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றில், ஒரு பாத்திரத்தில் மூன்று லிட்டர் தண்ணீர் கொதிக்க வைக்கவும், பிறகு நன்கு கொதித்த தண்ணீரில் மூன்று எலுமிச்சை பழங்களை பிழிந்து விடுங்கள். அதனுடன் 3 ஸ்பூன் கல் உப்பு சேர்த்து நன்கு கலக்கவும். வெதுவெதுப்பான வெறும் வயிற்றில் ஒரு அரை லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

தண்ணீர் உள்ளே சென்று சிறிது நேரத்தில் மலம் வருவதற்கான அறிகுறிகள் தென்படும். இல்லை எனில் 10 நிமிடம் கழித்து மேலும் சிறிதளவு தண்ணீர் குடிக்க வேண்டும், 5 நிமிடங்களில் கழிவறை செல்ல நிச்சயம். சென்று வந்தவுடன் மீண்டும், எலுமிச்சை உப்பு நீர் கலவையை எவ்வளவு குடிக்க முடியுமோ அவ்வளவு குடியுங்கள். சில நிமிடங்களில் மறுபடியும் மலம் கழிக்க வேண்டும் என்ற உணர்வு வரும், இதுபோல் நான்கைந்து முறை இந்த கலவையை முடிந்த அளவு தொடர்ந்து அருந்தினால், அத்தனை முறையும் கழிவறை செல்வது நிச்சயம்.

நீர் அருந்துவதை நிறுத்தினால் மலம் வருவது நின்றுவிடும், இந்த முறையில் வயிறு இயற்கையான முறையில் சுத்தம் செய்யப்படும்இ உடல் வலுபெறும்.

### பயன்கள் :

சாப்பிடும் உணவுகள் உடலில் நன்கு தங்கும், நன்கு செரிமானமாகும், உணவுகளில் உள்ள ஊட்டச்சத்துக்கள் அனைத்தும் இரத்தத்தில் கலக்கப்படும், உங்களின் உடல் மன நலம்பேண கழிவுநீக்கமே சிகிச்சை.



நன்றி உறவுகளே... என்றும் உங்கள் அன்பு சகோதரன்

**ஜே. அன்புரோஸ்**
நலநெறியாளன்
தொடர்பு எண் : **9360456063**